முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

89—

திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம்

***6499—திரு. எஸ்.எஸ். சரவணன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட 21 பயிற்சி நிலையங்கள்மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 9,115 நபர்களுக்கு பல்வேறு தொழில் பிரிவுகளில் மாநில அரசின் நிதியின்கீழ் இலவச குறுகியகால பயிற்சி வழங்கப்பட்டு, 4,467 நபர்கள் பணி வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். மேலும், மத்திய அரசின் திட்டமான Pradhan Mantri Kaushal Vikas Yojana 2.0 திட்டத்தின்கீழ் கடந்த 2 ஆண்டுகளில் 5 பயிற்சி நிறுவனங்களின்மூலம் 684 நபர்களுக்கு பல்வேறு தொழில் பிரிவுகளில் மத்திய அரசின் நிதியின்கீழ் இலவச குறுகியகால பயிற்சி வழங்கப்பட்டு, 234 நபர்கள் பணி வாய்ப்பைப் பெற்றுள்ளனர். மதுரையிலுள்ள CIPET மூலமாக Plastic Engineering துறையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிமூலம் 1,000 நபர்களுக்கு திறன் பயிற்சி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு தற்போதைய தொகுப்பில் 120 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மதுரை மாவட்டத்திற்கென தனியாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுப் பயிற்சி முனையம் அமைக்கும் நிலை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜூலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

90—

பேருந்து வசதி

***4647—திரு. அ. சண்முகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதி, காந்திபுரம் முதல் தொப்பம்பாளையம் வரை புதிய வழித் தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் மண்டலம் மூலமாக காந்திபுரத்திலிருந்து தொப்பம்பாளையம் வரை ஒரு நகரப் பேருந்துமூலம் தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம் அவர்கள்.*

திரு. அ. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், துணை முதல்வர் அவர்களையும் வணங்கி, என்னுடைய மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஓர் ஆண்டுக்கு முன்பாக நான் வைத்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டதற்கு மாண்புமிகு அமைச்சர்*